மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசலிக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: தலைவர் அவர்களே, நகராட்சிகளில் கிரெடிட் சொசைட்டி மூலமாகப் பால் விநியோகம் செய்வதற்கு அரசைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் மூலமாகப் பாலை கொடுத்து, தரமாக நல்ல பால் கிடைக்க வழிவகை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி வட்டாரத்தில் வாசனை திரவியம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை

*வினா எண் 337—செல்வி வி. விசயலட்சுமி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி வட்டாரங்களில் நிறைய மல்லிகைப்பூ, ரோஜாப்பூ பயிர் செய்யப்பட்டு வருகிற நிலையில், அப் பகுதியில் அரசு ஒரு வாசனை திரவியம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இம்மாதிரித் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

செல்வி வி. விசயலட்சுமி: பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகும் பூக்கள் சுமார் தினசரி 15,000 கிலோ அளவிற்கு பெங்களூர் போன்ற நகரங்களுக்கு அனுப்பப்படுவதால், உற்பத்தியாளர்களுக்கு இலாபம் கிடைப்பதில்லை. உற்பத்தியாளர்களுக்கு இலாபம் கிடைக்கிற வகையிலே, அங்கு வேலை வாய்ப்பு அதிகமாக ஏற்படுகிற வகையிலே, இந்தத் தொழிற்சாலையை துவங்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் இன்றைக்கு பூக்கள் அதிகமாகப் பயிர் செய்யப்படுவதால், வாசனை திரவியம் தயார் செய்யும் தொழிற்சாலை ஒன்றை அங்கு துவங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு பத்து இலட்ச ரூபாய்க்கு மேல் மூலதனம் தேவைப்படுகிறது. இதற்காக இயந்திரங்கள் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை இருப்பதால், உடனடியாக ஆரம்பிப்பதற்கு அரசு தரப்பில் உத்தேசம் இல்லை. தனியார்கள் யாராவது முன்வந்தால் தேவையான உதவிகளை அரசு செய்யும்.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை தற்போது ஆரம்பிப்பதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பகுதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதியாகவும் இருக்கிறது. அந்த வகையிலாவது அரசு நிச்சயமாக இந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டும். பயிரிடப்படும் பூக்களை வெளி மாநிலங்களிலிருந்து வந்து வியாபாரிகள் குறைந்த விலையில் எடுத்துச் செல்கிறார்கள், என்ற நிலைமை இருந்து வருகிறது. விவசாயிகள் பயன் பெறுகிற அளவில் பூக்களை அரசே கொள்முதல் செய்து விவசாயிகள் நியாயமான விலை பெற வகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் இந்தத் தொழிற்சாலை வரவேண்டுமென்று அரசுக்கு அக்கறை இருக்கிறது. உடனடியாக அரசு தரப்பில் இதில் ஈடுபட முடியாது. தனியார் யாராவது வந்தால் எல்லா சௌகரியங்களையும் அரசு செய்யும்.

[முற்பகல் 9—10]

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்திலிருந்து வருகின்றவர்கள் இங்கே விளைகின்ற மல்லிகை, ரோஜா போன்ற பூக்களை எல்லாம் விலைக்கு வாங்கி தங்கள் மாநிலத்திற்குக் கொண்டு சென்று அவர்களே திரவியங்களை உற்பத்தி செய்து இதே மாநிலத்திற்குக் கொண்டுவந்து அவைகளை நல்ல விலைக்கு விற்கிறார்கள். அவர்கள் இங்கே வந்து குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்து கொண்டுபோய் வாசனைத் திரவியமாக மாற்றி நம்முடைய மாநிலத்திலேயும் அதிக விலைக்கு விற்று நல்ல மார்க்கெட்டை அவர்களுக்கு ஏற்படுத்திப் பயன்பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை அரசு கருத்தில் கொண்டு அரசின் சார்பிலேயே இதுபோன்ற ஒரு தொழிற்சாலையைத் தொடங்க முன்வருமா?

[1981 மார்ச் 7

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேர்கள் தெரிவத்திருக்கிறார்கள். என்றாலும் திரு. திருப்பூர் மணிமாறன் அவர்கள் சொல்கின்ற உணர்வுகளை உணர்வு பூர்வமாக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மல்லிகை, ரோஜா எப்படி அதிகமாக உற்பத்தியாகிறதோ அதேபோல் தஞ்சை மாவட்டத்திலே வேதாரண்யம் பகுதியிலே அதிகமான பூக்கள் உற்பத்தியாகின்றன. தனியார்கள் அவற்றைக் குறைவான விலைக்கு வாங்கி அதிகமாக இலாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, அரசு சார்பிலே உடனடியாக வாக்குறுதி அளிக்காவிட்டாலும் தனியார்கள் என்பதைவிட அரசு எதிர்காலத்திலாவது பரிசீலனை செய்து அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே வீரபாண்டிப்பகுதியிலே பனைமரத்துப்பட்டியிலே இம்மாதிரி வாசனைத் திரவியம் செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தத திட்டமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பூக்கள் அதிகமாக உற்பத்தியாகும் சீசன் காலங்களிலே மலிவான விலைக்கு உற்பத்தியாளர்கள் கொண்டுபோய் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மதுரை மாவட்டத்திலே நிலக்கோட்டை, கொடைரோடு தாலுக்காவிலும், திண்டுக்கல் தாலுகாவிலும் நிறையப் பூக்கள் உற்பத்தியாகின்றன. அங்கே வாசனைத் திரவியங்கள் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாக சென்ற தடவை சொன்னார்கள். இந்தத் தடவை அதை பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த யோசனைகளை அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யலாம்.

கஸ்தம்பாடி பஞ்சாயத்துப் பகுதியில் போடப்பட்ட துளைக் கிணறுகள்.

*வினா எண். 376—திரு. இல. பலராமன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் தாலுக்கா கஸ்தம்பாடி பஞ்சாயத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சுமார் 600 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் அரசு துளைக் கிணறுகள் போட்டதின் நோக்கம் யாது?

(ஆ) இந் நிலத்தை பயன்படுத்தும்வகையில் கால் நடைப் பண்ணை வைக்கும் உத்தேசம் ஏதும் உண்டா?